Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 16.07.2026 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 16.07.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

ஒடிஷாவில், **பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரை** இன்று தொடங்குவதை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர், மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நாட்டின் முதலாவது **ஹைட்ரஜன் ரயிலை**, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை தொடக்கி வைக்கிறார்.

நீடித்த **வேளாண் வளர்ச்சி**க்கு ஏதுவாக, விவசாயிகள், **ஒருங்கிணைந்த சாகுபடி** முறைகளை கடைபிடிக்க வேண்டும் என, மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

புதுச்சேரி அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் இன்று புதுடெல்லியில், **மத்திய நிதியமைச்சரை சந்தித்து**, ஏனாம் **கோதாவரி புஷ்கரம் விழா**விற்கு, நிதி உதவி கோரினார்.

*ரத யாத்திரை (15)*

ஒடிஷாவில் பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரை இன்று தொடங்குவதை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். நாட்டு மக்கள் அனைவரும் வளமாக, மகிழ்ச்சியுடன் அமைதியாக வாழ, மகாபிரபு ஜெகந்நாதரின் அருள் தொடரட்டும் என்று குடியரசு தலைவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். அனைத்து வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டு பக்தி, சமத்துவம், மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படையில் ஒருங்கிணைப்பதே பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரை என்று குடியரசு துணைத் தலைவர்

கூறியுள்ளார். காலத்தை வென்று நிற்கும் இந்திய கலாச்சார ஆன்மிக மரபுகளின் துடிப்பான வெளிப்பாடே பூரி ரத யாத்திரை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். கூட்டுப் பங்கேற்பு மற்றும் தன்னலமற்ற சேவையின் சின்னமாக திகழும் பூரி ரத யாத்திரை, தலைமுறை-தலைமுறையாக மக்களுக்கு ஊக்கமளித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

*மோடி பயணம் -1 (06)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை ஹரியானா, சண்டிகர் மற்றும் பஞ்சாப் செல்லவிருக்கிறார். ஹரியானா மாநிலம், ஜிண்ட் ரயில் நிலையத்தில், ஹைட்ரஜன் எரிபொருள் மூலமாக இயங்கும் நாட்டின் முதலாவது ரயிலை அவர் கொடியசைத்து தொடக்கி வைக்கிறார். ஜிண்ட்-சோனிபட் ரயில் நிலையங்களுக்கு இடையே இயக்கப்பட உள்ள இந்த அதிநவீன ஹைட்ரஜன் ரயில் குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

*மோடி பயணம் -2 வாய்ஸ் (14)*

**(வாய்ஸ்)**

ஹைட்ரஜன் செல் மூலம் மின்சாரம் தயாரிக்கும் வசதியுடன் முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள புதிய ரயில் நாளை முதல் செயல்படத் தொடங்குவதால், ஜெர்மனி, ஜப்பான், சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, உலகிலேயே இத்தகைய தொழில்நுட்பம் பெற்றுள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைகிறது. புதிய ஹைட்ரஜன் ரயிலில் 3 ஆயிரத்து 200 குதிரைத் திறன் கொண்ட ஹைட்ரஜன் செல் எஞ்சின் இணைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 10 பெட்டிகள் அடங்கிய இந்த ரயில், உலகின் மிக நீளமான ஹைட்ரஜன் ரயிலாக திகழும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஹைட்ரஜன் செல் மூலம் ரயில்களை இயக்குவதால் ரயில்

பாதை நெடுகிலும் மின்சாரக் கம்பி அமைக்க வேண்டியதன் அவசியத்தை தவிர்க்கலாம் என்பதும், பசுமையான ஹைட்ரஜன் எரிபொருளின் பயன்பாட்டினால், சுற்றுச்சூழல் மாசுபாடு கணிசமாக குறையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*மோடி பயணம் -3 (08)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை ஹரியானா மாநிலம் ஜிண்ட் நகரில், மொத்தம் 14 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். தொடர்ந்து, சண்டிகரில் 6 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை பிரதமர் தொடக்கி வைப்பார் என்றும், அதை தொடர்ந்து பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில், மறு மேம்பாடு செய்யப்பட்ட பல்வேறு ரயில் நிலையங்களை அவர் திறந்து வைப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*ராஜ்நாத் சிங் (11)*

நாட்டில் தற்போது உருவாக்கப்படும் உள்கட்டமைப்பு வசதிகள் தான் நாளைய நாகரிகத்தை வரையறுக்கும் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். குறிப்பாக எல்லைப்புற சாலைகள் அமைப்பினால் உருவாக்கப்பட்டுள்ள ரோஹ்தாங் சுரங்கப் பாதை, உம்லிங் லா மலைப் பாதை போன்ற திட்டங்கள், எதிர்காலத்தில் முக்கியப் பலன்களை வழங்கும் என்று அவர் இன்று புதுடெல்லியில் எல்லைப்புற சாலைகள் அமைப்பின் தொழில்நுட்ப பயிலரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினார். பொறியியல் அற்புதங்களாகவே திகழும், இத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதில், எல்லைப்புற சாலைகள் அமைப்பின் கடின உழைப்பும் அர்ப்பணிப்பு உணர்வும், மிகவும் பாராட்டத்தக்கது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

*உடான் (15)*

உடான் திட்டத்தின் அடுத்த கட்டத்தில் மேலும் 120 நகரங்களுக்கு விமான இணைப்பு வழங்கப்படும் என்றும், இதன் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் மேலும் 4 கோடி பேர் விமானப் பயணம் மேற்கொள்ள ஏதுவாகும் என்றும் மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர்

திரு.கிஞ்சராப்பு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார். அடுத்த கட்ட உடான் திட்டம் குறித்து புதுடெல்லியில் இன்று நடைபெற்ற பயிலரங்கில் அவர் பேசுகையில், 2ஆம் நிலை மற்றும் 3ஆம் நிலை நகரங்களில் அமையும் விமான நிலையங்களின் பராமரிப்பு பணிகளுக்கு நிதி ஆதரவு வழங்க, மேம்படுத்தப்பட்ட உடான் திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளதாகவும், விமான சேவை நிறுவனங்களுக்கு வழங்கப்படும் 3 ஆண்டு ஆதரவு, 5 ஆண்டுகளாக உயர்த்தப் பட்டுள்ளதாகவும் கூறினார். உள்நாட்டு அளவிலான விமான உற்பத்தியை ஊக்குவித்து விமானங்களுக்கான பராமரிப்பு வசதிகளை மேம்படுத்தவும், இதன் மூலம் பிராந்திய வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும், உடான் திட்டத்தினால் ஏதுவாகும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

*காங்கிரஸ் கூட்டம் (07)*

காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சியின் கூட்டம் புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. கட்சித்தலைவர் திரு. மல்லிகார்ஜுன கர்கே, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடரில் கட்சி எழுப்ப வேண்டிய முக்கிய பிரச்சனைகள் குறித்து, இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக, காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பிரமோத் திவாரி பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*வேளாண்மை -1 (06)*

வேளாண் துறையில் நீடித்த வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில், விவசாயிகள் ஒருங்கிணைந்த சாகுபடி முறைகளை கடைபிடிக்க வேண்டும் என மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 98-ஆவது நிறுவன நாள் விழாவில் அவர் உரையாற்றினார். அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

*வேளாண்மை -2 வாய்ஸ்  (12)*

**(வாய்ஸ்)**

இந்தியாவில் விவசாயிகளும், விஞ்ஞானிகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் கடினமான முயற்சிகளால், வேளாண் துறையில் அசாதாரணப் பலன்கள் ஏற்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சௌஹான் கூறினார். கடந்த ஆண்டு நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 376 மில்லியன் டன்னாக சாதனை அளவில் அதிகரித்து இருப்பதாகவும், இதே காலகட்டத்தில் 386 புதிய பயிர் ரகங்கள் உருவாக்கப் பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். இத்தகைய மாற்றங்களைக்  கொண்டு வருவதில், முக்கிய **வினையூக்கி**யாக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் செயல்பட்டு வருவது பாராட்டத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார். வேளாண் விஞ்ஞானிகள், விவசாயிகளின் அவ்வப்போதைய தேவைகளுக்கு ஏற்றதாக தங்களின் ஆராய்ச்சிகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என வேளாண் அமைச்சர் தமது உரையில் மேலும் வலியுறுத்தினார்.

*மல்லாடி சந்திப்பு (07)*

புதுச்சேரி அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் இன்று புதுடெல்லியில், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை சந்தித்து, ஏனாமில் அடுத்த ஆண்டு ஜூன்-ஜூலை மாதங்களில் நடைபெறவுள்ள கோதாவரி புஷ்கரம் விழாவிற்கு, 48 கோடி ரூபாய் நிதி அனுமதிக்க கோரினார். புதுச்சேரி விமான நிலையத்தின் விரிவாக்கப் பணிகளுக்கு நிதி வழங்கவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

*ஜிப்மர் (17)*

புதுச்சேரியில், நோயிலிருந்து விடுதலை என்னும் ஒரு மாத கால சிறப்பு பிரச்சார இயக்கத்தை, ஜிப்மர் இன்று தொடக்கியுள்ளது. ஆகஸ்ட் 15ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இந்த பிரச்சாரத்தின்போது, தகுதியுள்ள பயனாளிகளுக்கு ஆயுஷ்மான் பாரத் ஜன் ஆரோக்யா அட்டை, ஆயுஷ்மான் வய வந்தனா அட்டை மற்றும் ஆபா கணக்கு எண்கள், இலவசமாக பதிவு

செய்து உடனடியாக வழங்கப்படும். இந்த இயக்கத்தை ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி தொடக்கி வைத்துப் பேசுகையில், சுகாதார திட்டங்களின் பலன்கள், தகுதியுள்ள அனைவருக்கும் சென்று சேரவேண்டும் என்பதே பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான தொலைநோக்கு அரசின் நோக்கம் என்றும், ஆயுஷ்மான் பாரத் திட்டம் மூலம், மக்களுக்கான சுகாதார சேவைகள், மலிவான கட்டணத்தில், டிஜிட்டல் முறையில் வழங்கப்படுவதாகவும் கூறினார். அனைவருக்கும் தரமான சுகாதார சேவைகளை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் ஜிப்மர் செயல்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் வினோத் குமார், பேராசிரியர்கள், அதிகாரிகள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*உழவர்கரை நாய் (09)*

உழவர்கரை நகராட்சிப் பகுதிகளில் தெருநாய்களின் எண்ணிக்கையைக் குறைக்க, விலங்குகளுக்கான பிறப்புக் கட்டுப்பாட்டு விதிகளின் கீழ், தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுவதால் பொதுமக்கள் தெருநாய் பிரச்சனை தொடர்பான புகார்கள் மற்றும் தகவல்களை 1800-599-1810 என்ற உதவி எண்ணில் தெரிவிக்கலாம் என நகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது. தெருநாய்களை மனிதநேய முறையில் பிடித்து, கருத்தடை அறுவை சிகிச்சை செய்த பின்னர், பிடித்த இடத்திலேயே மீண்டும் விடப்படுவதாகவும், வேறு இடங்களில் விடுவது விதிமுறைகளுக்கு மாறானது என்றும், நகராட்சி நிர்வாகம் கூறியுள்ளது.

*மாஹி (08)*

மாஹேயில், மகாத்மா காந்தி அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், தேசிய அளவிலான விக்சித் பாரத் இளையோர் நாடாளுமன்ற போட்டியில், கல்லூரி சார்பில் பங்கேற்ற மாணவி வீணாதாரிக்கு பாராட்டு தெரிவக்கப்பட்டது. புதுச்சேரி பருவநிலை அறிஞர் விருது பெற்றவர்களும், விழாவில் கௌரவிக்கப்பட்டனர். மண்டல நிர்வாக அதிகாரி திரு. அங்கித்

குமார் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் திரு. அசோக் குமார் விழாவை தொடக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் டாக்டர் சிவதாசன் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

*வானிலை (13)*

மேற்கு திசைக் காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் இதர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவும் என்று வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளை முதல் வரும் 22ஆம் தேதி வரை புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, நேற்று வேலூர், திருவள்ளூர், மதுரை, கரூர், நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களின் ஒருசில இடங்களில் வெப்ப அலை வீசியது. வரும் 20ஆம் தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றங்களுக்கு வாய்ப்பு குறைவாகவே உள்ளதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*FIFA (05)*

FIFA உலகக் கோப்பை கால்பந்து போட்டித் தொடரில், வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில், ஸ்பெயின்-அர்ஜென்டினா அணிகள் மோதவுள்ளன. இவ்விரு அணிகளும் அரையிறுதிப் போட்டிகளில் முறையே France மற்றும் இங்கிலாந்து அணியை தோற்கடித்து, இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

*உயிரி பொருளாதாரம் (12)*

உயிரி பொருளாதாரம் தழைப்பதால், நாட்டின் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு வலுப்பெறும் என்று மத்திய அறிவியல்-தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். 2035-ஆம் ஆண்டிற்குள், உலகின் முன்னணி உயிரி பொருளாதார சக்தியாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான செயல் திட்டத்தை, இன்று புதுடெல்லியில் நடைபெற்ற

நிகழ்ச்சி ஒன்றில், அவர் வெளியிட்டு பேசினார். இந்தியாவின் உயிரி பொருளாதாரம், தற்போது 195 பில்லியன் டாலர் மதிப்பிற்கு உயர்ந்துள்ளதாகவும், 2030-ஆம் ஆண்டிற்குள் இது, 300 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். உலக அளவில் பிரத்யேகமான உயிரி பொருளாதார கொள்கையுடன் கூடிய ஒருசில நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதை, அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டினார்.

தலைப்புச் செய்திகள்

ஒடிஷாவில், **பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரை** இன்று தொடங்குவதை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர், மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நாட்டின் முதலாவது **ஹைட்ரஜன் ரயிலை**, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை தொடக்கி வைக்கிறார்.

நீடித்த **வேளாண் வளர்ச்சிக்கு** ஏதுவாக, விவசாயிகள், **ஒருங்கிணைந்த சாகுபடி முறைகளை** கடைபிடிக்க வேண்டும் என, மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

புதுச்சேரி அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் இன்று புதுடெல்லியில், **மத்திய நிதியமைச்சரை சந்தித்து**, ஏனாம் **கோதாவரி புஷ்கரம் விழாவிற்கு**, நிதி உதவி கோரினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது RSS/SM/VM.
Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 16.07.2026 / Script